தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஎ	திருவள்ளுவர் யாண்டு ககஅஉ கர—சித்திரை 1951—ஏப்பிரல்	மலர் க

புத்தாண்டு.

திருவருள் புத்தாண்டில் செந்தமிழ்ப் பெருமக்கள் முதலான யாவருக்கும் நலம் தருவதாக! அன்பர்கள் எல்லாருக்கும்! எம் புத்தாண்டு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றோம்.

* * * * *

கர, சித்திரை, முதல் நாள் பிரித்தானியக் குழு சென்னை வினையாளர் திரு. S. C. G. பாஹ் அவர்களும், அவர் மனைவியாரும் நம் சங்கத்திற்கு வந்து கல்வி நிலையங்களையும், நூல் நிலையத்தையும் பார்வையிட்டு மகிழ்ந்து சங்கத்தொண்டர்களுடன் அளாவளாவி மாலை 6 மணியளவில் பிரித்தானிய கலைத்துறை முயற்சிகளை ஒலி நிழற்படம் முதலான துணையுடன் விளக்கிக் காட்டினார்கள். கூட்டத்திற்கு எழுந்தருளிய அறிஞர்களும் ஏனையரும் இவற்றைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். அன்று தலைமை தாங்கிய தஞ்சை ஆசிரியப் பயிற்சிப் பள்ளித் தலைவர் திரு. சம்பந்தம் பிள்ளையவர்கள் பிரித்தானியக் குழுவினர் பணிகளைப் பாராட்டிப் பேசினார்கள். உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. சோ. திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் சங்கச் சார்பில் விருந்தினர்க்கு நன்றி கூறினார்கள். சங்கத் தலைவர், முத்தமிழ் வள்ளல் இராவு பகதூர். திரு. ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்கள் மாலை சூட்டி மகிழ்ந்தார்கள். பிரித்தானியக் குழுவின் சார்பாக திரு. பாஹ் அவர்கள் சங்கத்தொண்டுகளை நன்கு மதித்து நூல் நிலையத்துக்குப் பல அரிய நூல்களை நன்கொடையாக வழங்கினார்கள். அவர்கள் தஞ்சையிலும், தஞ்சைப் பக்கங்களிலும் உள்ள பல சிறப்பிடங்களைக் கண்டு மகிழ்ந்து தமிழர் நாகரிகச் சிறப்பியல்புகளையும் ஊன்றி நோக்கிப் பாராட்டினார்கள்.

துயரம்

திரு. சரசுவதி அம்மையார்

நம் சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள் மனைவியார், திரு. சரசுவதி அம்மையார் விகிருதி, பங்குனி, 21-ஆம் நாள் உலக வாழ்வு நீத்த செய்தி தமிழர் களுக்கெல்லாம் பெருந் துயரம் தருவதாகும். திரு. பிள்ளை யவர்கள் தமிழ்த் தொண்டிலும், இல்வாழ்க்கைத் துறை யிலும் ஏனைய பணிகளிலும், அம்மையார் உறுதுணையா யிருந்து சிறந்தது யாவரும் போற்றிப் புகழ்ந்ததே. இத் தகைய நற்குடி நற்பண்பினர் மறைவு நம் பிள்ளை யவர் களுக்கே யன்றி அவர்கள் அன்பினில் ஈடுபட்ட தமிழர்கள் எல்லாருக்குமே மாற்றொணாக் குறையாக நிற்கின்றது. இக் குறை திரு. பிள்ளை யவர்களுக்கும் அவர்கள் அன்பர்களுக் கும் என்றும் மனத் தளர்ச்சியைப் பெருக்கிக் கொண் டிருக்கத்தான் செய்யும். இத் தளர்ச்சித் துயரைப் பொறுத்திருக்கத் திருவருள் துணை நிற்பதாக.

தெய்வத்திரு. அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத் தில் 20-ஆவது பட்டத்தில் எழுந்தருளி அருட் செங்கோல் செலுத்திவந்த தெய்வத்திரு. அம்பலவாண தேசிக பரமாச் சாரிய சுவாமிகள் அவர்கள் விகிருதி, பங்குனி, 30-ஆம் நாள் தெய்வத்திரு. நமச்சிவாய தேசிக மூர்த்திகளைக் காணத் திருக்கயிலைக்கு எழுந்தருளினார்கள். மரபுக்கு மாறுபாடு என்றாலும், சுவாமிகள் மறைவு தமிழருக்கும் சைவருக்கும் ஏனைய அன்பர்கட்கும் ஆற்றொணாத் துயர் உண்டாக்கிற் றென்று சொல்லத்தான் வேண்டும்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் மறைபட்டிருந்த சிறப் பைத் திரும்ப உண்டாக்கிப் பொருள், சைவத் தொண்டு, தமிழ்த் தொண்டு முதலிய துறைகளின் தளர்ச்சி நீக்கி, ஆதீனத்தின் பெருமை எங்கணும் பரவச் செய்த தனிச் சிறப்பு நம் சுவாமிகளுக்கே உரியதாகும்.

சுவாமிகள் சமயத் துறையிலும் கல்வித் துறையிலும் அங்கங்கே நிலையங்களை ஏற்படுத்தி பிறப்பு வேறுபாடின்றி மக்களை முன்னேறச் செய்யும் பேரார்வம் மிகுந்து விளங்கி னார்கள். இவ் வழியில் ஈராண்டுகளுக்கு முன் நம் சங்கக் கல்வி நிலையங்களின் ஆட்சியை ஏற்றருளிச் சிறப்பாக நடத்திவருவது யாவரும் அறிந்ததே. உறுதி தந்தபடி, அணித்தில் ஒரு ஆங்கிலக் கல்லூரியும் ஏற்படுத்தத் திருவுளங் கொண்டார்கள். இத்தகைய பேருள்ளம் படைத்த பெருமான் இப் பணிகளை எல்லாம் குறைவின்றி

சேரநாட்டின் தொன்மை.

வித்துவான் திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள்,
அண்ணாமலைநகர்.

சேர நாட்டின் தொன்மையை யுணர்தற்குச் சங்க இலக்கியங்கள் ஓரளவே துணையாக இருக்கின்றன. இவ் விலக்கியங்கள் பலவும் சான்றோர் பலர் அவ்வப்போது பாடிய பாட்டுக்களின் தொகையாதலின், சேர வேந்தர்களையும், சேர நாட்டுக் குறுநிலத் தலைவர்களையும் குறித்து நிற்கும் பாட்டுக்கள் சேர நாட்டின் பண்டை வரலாற்று நிலையை முறையாகக் கூறும் நிலையில் இல்லை. அவற்றைப் பாடினோர்க்கும் சேர நாட்டின் இயற்கை நிலையை வரலாற்று முறையில் வைத்து உரைக்க வேண்டிய நிலையும், தொடர்பும் உண்டாகவில்லை. இச் சங்க இலக்கியங்கள் சேர நாட்டு மலைகளிற் சிலவும், யாறுகளிற் சிலவும், ஊர்களிற் சிலவும், வேந்தர் சிலரைப் பற்றிய குறிப்

ஆற்றி நற்பேறுபெறும் நல்வினையைத் தம்மடியார் பெற வேண்டும் என்று கருதிப் போலும், இவ்வளவில் தம் வினையை நிறைவேற்றிக் கொண்டார்கள். சுவாமிகளது குமிண் சிரிப்பும், பனித்த மொழியும், பொன்போல் மேனியில் பால் வெண்ணீறும், அருட்கையும் என்றென்றும் எம்மனம் விட்டகலா.

* * * * *

மகிழ்ச்சி.

தெய்வத்திரு. சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.

20-ஆவது குருமகா சந்நிதானம் அவர்களுடன் இருந்து அவர்கள் நற்பண்புகளில் ஈடுபட்டுத் தேர்ச்சியுற்றுத் திகழும் தெய்வத்திரு. சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆதினத்து 21 ஆவது பட்டத்தில் எழுந்தருளி அருட்செங்கோல் செலுத்துகிறார்கள். 20 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளங்கொண்டவாறு சிவப்பணி தமிழ்ப்பணி முதலியவைகளை எல்லாம் குறைவற ஏற்றுக், கோயிற்பணிகளெல்லாம் குறையின்றி நடைபெறவும், கலைக் கோயில்கள் சிறக்கவும் ஆன பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். இவர்கள் ஆட்சி நாளும் நாளும் சிறக்கத் திருவருளை வழுத்துகின்றோம்.

பும் உடையனவாகும். அவற்றுள்ளும் பதிற்றுப்பத்தும் புறநானூறும், சேர வேந்தர்களைப் பற்றிய குறிப்புக்களைச் சிறப்பாகக் கொண்டுள்ளன. ஏனையவை ஆங்காங்குச் சிற்சில வேந்தர்களையும் மலைகளையும் ஆறுகளையும் ஊர்களையும் குறிப்பாய்ச் சுட்டுவதோடு நிற்கின்றன.

இச் சங்க இலக்கியங்களை யடுத்துப் பின்னர்த் தோன்றிய சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சேர நாட்டைப் பற்றிச் சிறிது விரியக் கூறுகின்றன. இவ்விரண்டன் ஆசிரியர்கள் சேர நாட்டவ ராதலால், அவர் கூறுவன நம்முடைய ஆராய்ச்சிக்குத் துணையாவனவே. ஆயினும், அவை கிறித்துவுக்குப் பின் தோன்றிய காலத்தனவாகும். கிறித்துவுக்கு முன்பிருந்தே தென் தமிழ் நாடு சிறந்து விளங்கினமையின், சங்க காலச் சேர நாட்டின் தொன்மையை யறிதற்குப் போதுவன வாகா. ஆதலால், கிறித்துவுக்கு முற்பட்ட காலத்து வரலாற்றுக் குறிப்புக்கள் வேண்டப்படுகின்றன.

கிறித்துவுக்கு முன் தோன்றிய நூல்கள் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களி லுள்ள சில பாட்டுக்களுமாம். தொல்காப்பிய நூலின் நோக்கம் வரலாறு கூறுவதன்று; ஆனால் அது கூறும் பொருளிலக்கணப் பகுதி, தமிழ் கூறும் நல்லுலகத்து மக்களுடைய வாழ்க்கைக் கூறுகளைத் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் உரைப்பதேயாம்; வரலாறு குறிப்பது அதன் முழுத்த நோக்க மன்றென்பது உலகறிந்த செய்தி. ஆயினும், அது சேர மன்னருடைய அடையாளப் பூ, அவர்க்குத் தமிழகத்தின்பா லுள்ள உரிமை முதலிய குறிப்புக்களைத் தருவதோடு நின்றொழிகிறது. சங்க காலத்தில் வடவாரியர் கூட்டுறவு, ஏனைச் சோழ பாண்டியர் நாடுகளை விட மிகுதியாகச் சேர நாட்டில் உண்டாகி யிருந்தது. அதனால், சேரர்களைப் பற்றிய குறிப்புக்கள் வடவாரியருடைய வடமொழியில் காணப்படுவதற்கு இடமுண்டு. வட நூல்களில் இருக்கு வேதமும், தைத்திரீயமும், வியாச பாரதமும் சேரர்களைச் சேர ரென்றே குறித்து உரைக்கின்றன.[1]

இனி, சேர நாட்டின் தொன்மை கூறும் வரலாற்று நூல்கள் இரண்டு காணப்படுகின்றன. அவை, கேரள மகாத்மியம், கேரளோற்பத்தி யென்பன. அவற்றுள் முன்னது வடமொழியிலும் பின்னது மலையாள மொழியிலும் உள்ளன. இவை காலத்தால் மிகமிக பிற்பட்டன. கேரளோற்பத்தி யென்ற நூலை யெழுதியவர் துஞ்சாத்து இராமாநுஜன் என்பவர்.

1. P. T. S. Iyengar's History of the Tamils, P. 29, 328.

வேந்தர் குலத்தை வேரறுத்து வந்த பரசுராமன் புதிதாக நாடொன்று படைக்க விரும்பித் தன் தவ வன்மையால் கடலிலிருந்து மலையாள நாட்டை வெளிப்படுத்தி, அதன்கண் பிராமணர்களை வாழச் செய்தானாக, அவர்கட்குச் சில நாட்களுக்குள் நாகர்களால் பெருந் துன்ப முண்டாயிற்று. அது பொறாது அவர்களனைவரும் அந் நாட்டினின்றும் போய்விட்டனர். பின்னர், பரசுராமன் வடக்கிலிருந்த ஆரிய நாட்டில் அறுபத்து நான்கு ஊர்களில் வாழ்ந்த பிராமணர்களைக் கொணர்ந்து மேலைக் கடற்கரை நாட்டில் அறுபத்து நான்கு ஊர்களில் குடியேற்றினான். நாகர்களின் இடுக்கண் நீங்க நாக வழிபாடும், நாகர்கட்குக் கோயில்களும் ஏற்படுத்தினான். அவற்றால் அத் துன்பம் குறைவு பட்டது; உடனே, முன்னர் வந்திருந்து போன பிராமணர்கள் தங்களைப் பழந் துளுவ ரென்றும், துளு பிராமணர்க ளென்றும் கூறிக் கொண்டனர். பரசுராமன் அவர்கட்கு நாகர் இடுக்கண் தீர மந்திரங்கள் கற்பித்துக் கோயில்களில் பணி செய்யுமாறு ஏற்பாடு செய்தான். மருமக்கள் தாய முறையை ஏற்படுத்திய சிறப்புப் பரசுராமனுக் குரியது.

சில காலத்துக்குப் பின், அப் பிராமணர்கட் கிடையே மனப்புழுக்கமும், பூசலு முண்டாக, நான்கு ஊரவர்களை வருவித்து ஊர்க் கொருவராக நால்வரைத் தேர்ந்து, அவர்களை அரசியல் நடத்துமாறு பணித்தான். நால்வருள் ஒருவன் தலைவனாதல் வேண்டு மென்றும், அவனும் மூன்று ஆண்டுக்கு மேல் அரசியற் றலைவனாதல் கூடா தென்றும், அவர்கள் தங்களில் வகைமைச் செய்துகொண்டனர். அரசியலுக்கு ஆறிலொன்று கடமை செலுத்தப்பட்டது.

சில காலத்துக்குப் பின், வேலியே பயிரை மேயத் தலைப்பட்ட தென்றாற் போல இத் தலைவர்கள் மக்கட்கு இன்னல் விளைக்கலுற்றனர். இக் கொடுமை நீங்க வேண்டி, அந்தப் பிராமணர்கள் தங்கட்கு அரசியற் றலைவனாகிறவன் தங்கள் நாட்டவனாக இருத்தல் கூடாது என்று துணிந்து கேய புரயென்னு மிடத்திலிருந்து ஒருவனைத் தேர்ந்து, கேய பெருமாள் என ஒரு பெயரிட்டுப் பன்னிரண்டாண்டு தங்கட்கு அரசு செலுத்துமாறு இசைவித்துக் கொண்டனர். கேய புரத் தலைவனுக்குக் கேய பெருமாள் என்று பெயர். அவனுக்கு முடி சூட்டும்போது, அவனுக்கு மலை நாட்டு வேந்தனான சேரமான் பெருமாள் என்பது பெயராம். இவ்வாறே சோழ நாட்டுச் சோழ பெருமாளும், பாண்டி நாட்டுக் குல சேகரனான பாண்டிப் பெருமாளும் ஆண்டு வந்தனர்.

முதற்கண் அரசேற்றுண்ட கேய பெருமாள் பன்னிரண்டாண்டு கொடுங்கோளூரிலிருந்து ஆட்சி புரிந்தான்; தலையூரில் கோட்டை யொன்று கட்டினன். பின் வந்த சோழப் பெருமாள் பத்தாண்டு இரு திங்கள் இருந்து, பழைய படியே சோழ நாடு சென்று சேர்ந்தார். சோழக் கரையில் அவர் கோட்டை யொன்றைக் கட்டினர். பாண்டிப் பெருமாள் பரம்பா என்னு மிடத்தே முடி சூட்டிக் கொண்டு ஒன்பதாண்டு அரசு புரிந்துவிட்டுப் பாண்டி நாடு சென்று சேர்ந்தார். அவர்க்குப் பின் சோழப் பெருமாள் ஒருவர் வந்து பன்னீராண்டு அரசு முறை செய்தார். அவர்க்குப் பின் குலசேகரப் பெருமாள் என்னும் பாண்டி வேந்தர் கேரள நாட்டுக்கு அரசரானர். அவரது ஆட்சிக்குப் பின்னர் கேரள நாடு என் னயிற் றென்பது தெரியவில்லை. இதற்கிடையே கலியுகம் பிறந்து பல ஆண்டுகள் கழிந்து விட்டன. கலியின் கொடுமை எழுவது கண்ட கேரளநாட்டு வேதியர்கள் "பூருவ தேசத்து" பாணப்பெருமாளென்று ஒருவரைக் கொணர்ந்து வேந்தனுக்கினர். அவ்வேந்தன் புத்த சமயத்தை மேற்கொண்டானாக, புத்தர்கட்கும், வேதியர்கட்கும் சமயவாதம் நிகழ்ந்தது; முடிவில் புத்தர்கள் தோற்றனர்; வேந்தன் வைதிக சமயத்தை மேற்கொண்டு புத்தர்களை நாட்டினின்று வெருட்டி விட்டான். எனினும், நான்கு ஆண்டுகட்குப் பின் அவன் மெக்காவுக்குப் போயொழிந்தான்.

பின்பு, துளுவன் பெருமாள் என்றொருவன் வட நாட்டினின்றும் கேரள நாட்டுக்கு வந்து அரசு மேற்கொண்டான். அவன் தனது நாட்டுக்கும் தன்பெயரால் துளுநாடு எனப் பெயரிட்டான். அத்துளுவன் ஆறுண்டு ஆட்சி செய்து இறந்தான். அவனையடுத்து இந்திரபெருமாள் என்பவன் வேந்தனுகிக் கொடுங்கோளூரிலிருந்து பன்னீராண்டு ஆட்சி புரிந்துவிட்டுப் "பூருவதேசம்" போய்ச் சேர்ந்தான். அவற்குப் பின் ஆரிய புரத்து ஆரியபெருமாள் என்பவன் வேந்தனுனன். அவன் கேரள நாட்டை ஐந்தாண்டுகளேயிருந்து அரசு புரிந்தான். அவனே, கேரள நாட்டைத் துளுராஜ்யம், கூபகராஜ்யம், கேரளராஜ்யம், மூஷிகராஜ்யம என நான்காக வகுத்த முதலரசன். அவற்குப் பின் கந்தன் பெருமாள் என்பவன் "பூருவ தேசத்"திலிருந்து வந்து நான்காண்டுகள் ஆட்சி செய்தான். அவன் கென்னத்தி யென்னுமிடத்தே ஒரு கோட்டை கட்டினன். கோட்டிப்பெருமாள் ஓராண்டும், மாடப் பெருமாள் பதினேராண்டும், அவன் தம்பி எழிப் பெருமாள் பன்னீராண்டும் ஆட்சி செய்தார்கள். பின்பு கொம்பன் பெருமாள் தோன்றித் தான் இருந்த மூன்றரை

யசண்டு நெய்த்தரா ஆற்றங்கரையில் ஒரு குடிலில் இருந் தொழிந்தான். விஜயம பெருமாள் விஜயன் கொல்லம் என்ற கோட்டையை யமைத்துப் பன்னீராண்டு ஆண்டான். அவற் குப் பின் வந்த வல்லபபெருமாள் சிவலிங்க மொன்று கண்டு நெய்த்தரா ஆற்றங்கரையில் அதற்கொரு கோயிலும், கோட்டையும் கட்டிப் பதினோராண்டிருந்து விட்டிறந்தான். அரிச்சந்திர பெருமாள், புரளி மலையில் ஒரு கோட்டை யமைத்து அங்கே தான் தனித்திருந்து ஒருவரும் அறியா வகையில் மறைந்து போனான். அவனை யடுத்துவந்த மல்லன் பெருமாள் பன்னீராண்டு ஆட்சிசெய்தான்.

இவற்குப் பின் வந்த பெருமாள் பாண்டிப் பெருமாளான குலசேகரப் பெருமாள் எனப் படுவன். இவன் காலத்தே வெளிநாட்டிலிருந்து ஆசிரியர் இருவரைக் கொணர்ந்து திருக் கண்ணபுரம் என்னுமிடத்தே கல்லூரி யொன்று நிறுவி, வேதியர்கட்குக் கல்வி வழங்கினன்; பதினெட்டியாண்டு அரசு புரிந்திருந்து உடலோடே துறக்கம் புகுந்தான். இவன் திரு வஞ்சைக் களத்தில் இருந்தவன்.

இதற்குப் பின் கேரள நாடு அரசர்களின்றிக் குடியரசாய் நெடுங்காலம் இருந்துவந்தது. ஊராட்சியும், நாட்டாட்சியும் பருடையார், மூலபருடையார் என்னும் மக்கட் கூட்டத்தார் ஆட்சி செய்தனர். ஒருகால் இவர்களிடையே கருத்து வேற்றுமை யுண்டாகவே, ஆனை குண்டி கிருஷ்ணராயரை வேண்டித் தமக்கோ ரரசனை யனுப்புமாறு கேட்டுக்கொள்ள, அவரொரு 'க்ஷத்திரியனைச்' சேரமான் பெருமாளாய் ஆட்சி செய்யப் பண்ணினர். கேரளோற்பத்தியின் வேறொரேடு. இச் சேரமான் பெருமாள் ஆதி பெருமாளும், பாண்டிப் பெருமாளும் கால யெல்லை முடிந்து நீங்கியபோது வந்தா ரென்று கூறுகிறது.

இச் சேரமான் பன்னீராண்டு இனிய ஆட்சி செய்த தனால் மேலும் இருமுறை அவனே சேரமான் பெருமாளாய்த் தொடர்ந்து ஆட்சி செய்தான். அந் நாளில் கிருஷ்ணராயர் மலையாள நாட்டின்மேற் போர் தொடுக்க முயன்றான்; அதனை யறிந்த சேரமான் அவனோடு பொருது முதற்கண் தோற்பினும் மறுமுறை வெற்றி பெற்றான். பின்பு சங்கராச் சாரியார் தோன்றிக் கேரள நாட்டு வரலாற்றை யெழுதிய தோடு பிராமணர்களுக்கு ஒழுக்க விதிகள் பல ஏற்படுத்தி நல் வழிப் படுத்தினர். முடிவில் இச் சேரமானும் புத்தருடன் மெக்காவுக்குப் போனான் என்றே இக் கேரளோற்பத்தி உரைக்கின்றது.

இக் காலத்தே கேரள நாட்டின் புறத்தே பாண்டி, கொங்கு, துளு, வைநாடு, புன்னாடு என்ற நாடுகள் இருந்தன. இச் சேரமான் கேரளத்தைப் பதினெட்டுச் சிறு நாடுகளாக வகுத்து ஆட்சி செய்தான். மெக்காவுக்குப் போனபோது, கள்ளிக்கோட்டை வேந்தனை, சாமொரின்பால் தன் உடைவாளைத் தந்து விட்டுப் போனானென்றும், அங்கே அவன் இறத்தற்கு முன் அரபியர் தலைவனொருவனை அனுப்பினானென்றும், அவன் வந்து இஸ்லாம் சமயத்தைப் பரப்பினானென்றும், கேரளோற்பத்தி கூறுகிறது.

மெக்கா நாட்டில் கடல் வாணிகம் செய்து, பெருஞ் செல்வம் ஈட்டிய ஒருவன் கள்ளிக்கோட்டையில் தங்கினன்; பின்பு புண்டரகோன் என்பான் காலத்தில் வெளிநாட்டிலிருந்து கோயமானொருவன் போந்து சாமொரினுக்குப் பெருந் துணை செய்தானென்றும், அவன் பெயரால் அது கோயிக்கோடு எனப் பெயர் பெற்றதென்றும் அதே நூல் கூறுகிறது.

இதுகாறும் காட்டியது கொண்டே இக் கேரளோற்பத்தியின் இயல்பு ஓரளவு வெளியாகும். இது குறிக்கும் காலத்தையும் பிற வரலாற்றுச் செய்திகளையும் ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் வரலாற்று நெறிக்கும் உண்மைக்கும் மாறாகப் பொய்யும் புனைந்துரையும் நிறைந்த நூலொன்று வேண்டுமாயின் அதற்கு எடுத்துக் காட்டாவது இக்கேரளோற்பத்தியென முடிவு செய்து ஒதுக்குகின்றனர்.

இந்த நாட்டுக்குக் கேரளம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் கூறலுற்ற கேரளோற்பத்தி, மலையாள நாட்டுப் பிராமணர்கள் சோழ மண்டலம் சென்று தங்கட்கொரு வேந்தன் வேண்டுமென ஒரு வேந்தனைக் கொண்டு வந்தனரென்றும், அவன் கேரளன் என்னும் பெயரினனென்றும், அவன் தனது ஆட்சியைச் செவ்வே நடத்திவிட்டுச் சென்றதனால், அவனது நினைவுக் குறியாக இந் நாடு கேரளமெனப் படுவதாயிற்றென்றும் கூறுகிறது.

கேரள மகாத்மியம் என்னும் வடமொழி நூலும்' கேரளோற்பத்தி கூறும் வரலாற்றையே சிறிது வகுத்தும் விரித்தும் உரைக்கிறதேயன்றிப் புதுவதாக ஒன்றும் கூறவில்லை. இதன் இடையிடையே வேதியர்க்குள்ள சிறப்பையும் நாட்டு வாழ்க்கையில் அவர்கட்கிருந்த உரிமையும் செல்வாக்கும் நன்கு விரித்துக் கூறப்படுகின்றன. இவற்றையெல்லாம்

(21 ஆம் பக்கம் பார்க்க.)

நடுகல்

(இது, திரு. அடிகளாசிரியரால், திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் 5—7—1949 ல் பேசப்பெற்றது.)

சங்ககாலத்து இலக்கியங்களைப் படிக்கும் பொழுது, அவற்றுள் வீரத்தைப்பற்றி மிகுதியும் பேசப்பட்டிருக்கக் காண்கிறோம். 'வீரம்' என்பது இறப்புக்கும் அஞ்சாது பகைவரை எதிர்த்து நிற்கும் நிலையாகும்.

'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என்கடவேன்' என்றார் மணிவாசகர். இறப்பென்றால் நாமெல்லாம் அஞ்சுவோம். ஆனால், ஒரு சிலர் இறப்பிற்குச் சிறிதும் அஞ்சுவதில்லை. தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் 'உறங்குவது போலும் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்றார்.

இறப்பு இரண்டு வகைப்படும். ஒன்று, ஒவ்வொரு மக்களும் பேரன் பேர்த்தி எடுத்துத் தொண்டு கிழவராகி வளி முதலான முக்கூற்றுப் பிணியால் இறப்பதாம். இதனைச் சான்றோர் 'கால மரணம்' என்று கூறுவர். காலமரணம் என்றால், 'சாக வேண்டிய காலத்திற்சாவது' என்று பொருள்படும்.

அப்படியின்றி, உலக இன்பத்தை நன்றாய்த் துய்த்திராத இளமைக் காலத்திலே மக்கள், படை, விலங்கு, இடி, தண்ணீர் முதலானவைகளால் திடீரென்று கொல்லப்பட்டிறத்தல் இரண்டாவதாகும். இதனைச் சான்றோர் 'அகால மரணம்' என்பர். அகால மரணம் என்றால் 'சாகக் கூடாத காலத்தில் சாவது' என்று பொருள்படும். இப்படி இரண்டுவிதமாய் இறந்தவருக்கும் கல்நாட்டி அவர்களைத் தெய்வமாக வழிபடுதல் பண்டைய மக்கள் கொள்கைகளுள் ஒன்றாகும்.

இறந்தவர்களைக் குறித்து ஈமக்கடன் செய்யும் பொழுது இறந்தவர் பெயரால் கல்நாட்டி, அக்கல்லை அவரின் அடையாளமாகக் கருதி, நீராட்டிப் பூச்சூட்டிச் சோற்றுப் பிண்டத்தைத்

தருப்பைப் புல்லின்மேல் வைத்துப் படைத்து என்னீர் வார்த்து அக்கல்லையும் பிண்டத்தையும் ஆறு, குளம் முதலானவைகளில் விட்டு விடுவர். இதனை வடமொழிப் புரோகிதம் செய்யும் குருக்கள் முதலியோர் 'பாஷாண ஸ்தாபனம்' என்று பெயரிட்டு அச்சடங்கை இன்றும் நடத்துகின்றனர். 'பாஷாணம்' என்றால் கல்; 'ஸ்தாபனம்' என்றால் நாட்டுதல்; 'கல் நாட்டுதல்' என்பது அத்தொடரின் பொருளாகும்.

தானே தற்கொலை செய்துகொண்டோ அல்லது மக்கள், படை முதலியவற்றால் கொல்லப்பட்டோ யாராவது காலமல்லாக் காலத்தில் இறந்துவிட்டால், அவருடைய உயிர் அலகையாய் இவ்வுலகிலேயே அலையுமென்று பண்டைய மக்கள் கருதி வந்தனர். அவ்வுயிர் அலகையாய் அலையின், அது பிறந்திருந்த குடும்பத்திற்கோ அல்லது ஊர்க்கோ அல்லது நாட்டிற்கோ தீங்குவரும் என்றும் அம்மக்கள் கருதி வந்தனர்.

அதன்பொருட்டு அவ் விறந்தவரைப் போல் கல்லைச் செதுக்கி, அவ்விறந்தவரின் உயிரை அக்கல்லில் பாவனையாய் எழுந்தருளச்செய்து, அதற்குச் செய்யவேண்டிய வழிபாடுகளையெல்லாம் குறைவறச்செய்து, ஐயனார் முதலான காட்டுத் தெய்வங்களின் கோவிலில் அக்கல்லினை அம்மக்கள் நாட்டிவிடுவர். அக்காரணத்தால் அக்காட்டுக் கோவில்களில் ஆள் வடிவமான கற்சிலைகள் ஏராளமாய்க் காணப்பெறும். அதனால், நாம் சில சமயத்தில் 'ஆள் வேண்டுமானால் ஐயனார் கோவிலிற்குப் போ' என்று வேடிக்கையாய்ப் பேசுவதுண்டு.

கோவலன் மனைவி கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கல்நாட்டி வழிபட்ட வரலாற்றைச் சிலப்பதிகாரத்தில் படிக்கிறோம். அக்கண்ணகி தன் கணவன் கொலையுண்ட வருத்தத்தால் அலைந்து திரிந்து, கடைசியில் நெடுவேள் குன்றம் அடிவைத்தேறி. பட்டினிகிடந்து உயிர் விட்டாள். அவளுடைய உயிர் அலகையாத் திரியின் நாட்டிற்குத் தீங்குவரும் என்று கருதிய சேரன் செங்குட்டுவன் இமயம் சென்று கல்லெடுத்து வந்து அவள் பெயரால் நாட்டி வழிபாடு செய்வானாயினன். இந் நிகழ்ச்சியிற் சில புனைந்துரைகளைப் பெய்து இளங்கோவடிகள் 'சிலப்பதிகாரம்' என்னும் காப்பியத்தைச் செய்வா ராயினர்.

அங்ஙனமின்றிப் போரிலே வீரங்காட்டி விழுப்புண்பட்டு இறந்த வீரர்களுக்கும் கல்நடுவதுண்டு. அக்கல்லிற்கு 'வீரக்கல்' 'நடுகல்' என்று பெயர். அக்கல்லைப்பற்றித் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, திருக்குறள் முதலான இலக்கண இலக்கிய நூல்களெல்லாம் குறிப்பிடுகின்றன.

அஞ்சாமல் போர் செய்து விழுப்புண் பட்டு ஆவி துறந்த அண்ணலுக்குக் கல் நடுவதாயின் முதலில், அவ் வீரனுக்கேற்ற சிறந்த கல்லைச் சிறந்த மலையில் தேடிக் காண வேண்டும் இரண்டாவது, இக் கல்லை யெடுத்து அவ் வீரனுடைய வடிவமும், புகழும், பெயரும் தோன்றச் செதுக்கி அமைக்க வேண்டும். மூன்றாவது, அக் கல்லைத் தூய்மை செய்வதன் பொருட்டுக் குறிப்பிட்ட காலம் வரை நீரினுள் இட்டு வைக்க வேண்டும். நான்காவது, அக் கல்லை ஓரிடத்தில் நாட்டி இறந்த வீரன் தெய்வமாய் அக் கல்லில் எழுந்தருளி யிருப்பதாய்ப் பாவனை செய்ய வேண்டும். ஐந்தாவது, உணவு முதலானவைகளை முன் வைத்துப் படைக்க வேண்டும். ஆறுவது, அவ் வீரனுடைய புகழ்களை எடுத்தோதி வாழ்த்த வேண்டும். இவற்றைத் தாம்,

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல்'

என்று தொல்காப்பியங் கூறுகின்றது.

ஏனைய இலக்கியம் முதலானவற்றிலும் நடு கற்களைப் பற்றிய பல செய்திகளை நாம் அறிந்து கொள்ளலாம். சைவ சமயத்தவர் இறந்தவரின் சமாதிமேல் நந்தி அல்லது சிவலிங்க வடிவத்தை அமைத்து வழிபாடு செய்கின்றனர். கிறித்துவரோ சிலுவைக் குறியைச் சமாதி மேல் அமைக்கின்றனர். ஆனால், பழங்காலத்துத் தமிழ் மக்கள் இறந்த வீரனைப் போல் ஆள் வடிவம் அமைய கல்விற் செதுக்கி நாட்டி வழிபட்டு வந்தனர். காட்டு வழியில் நாட்டப் பட்டிருந்த நடு கல்லை மாலை நேரத்தில் காட்டு யானையொன்று கண்டது, அவ்வியானை அக் கல்லை ஆளென்றே கருதிச் சென்று முட்டிற்று. அதனால், அதன்

தந்தங்கள் முறிந்து விட்டன. இக் கருத்தை,

‘சினவல் போகிய புன்கண் மாலை
அத்த நடுகல் ஆளென வுதைத்த
கான் யானைக் கதுவாய் வள்ளுகிர்
இரும்பிணை இதக்கையின் ஒடியும் ஆங்கண்’

என்ற அகநானூற்றின் 365 ஆம் பாட்டுத் தெரிவிக்கின்றது. மேலும் அவ் வீரக் கற்களில் வீரனுடைய பெயரும் புகழும், எழுதும் வழக்கம் இருந்து வந்த தென்பதைப் ‘பெயரும் பீடும்’ எழுதி என்னும் அகநானூற்றுச் செய்யுள் கொண்டு அறிய லாகும். ஆனால், உலகத்தில் ஆங்காங்கே நடப் பட்டிருக்கும் சில நடு கற்களை நோக்கினால், அவ் வீரனுடைய புகழ் எழுத்தால் எழுதப் பெறாமல், அவன் செய்த அருஞ் செயல்களெல்லாம் சித்திரத்தாலேயே விளங்கும்படிச் செதுக்கப் பெற்றிருக்கும்.

எடுத்துக் காட்டாக, ஒரு வீரன் பலருக்கும் துன்பம் விளைத்து வந்த புலியைக் கண்டு அஞ்சாமல் எதிர்த்து, அதை ஈட்டியாற் குத்திக் கொன்ற பொழுது அப் புலி செய்த காயத்தால் இறந்திருப்பின், அவன் புலியைக் குத்துகின்றாற் போல கல்லிற் செதுக்கி அக் கல்லை நாட்டி வழிபடுவ துண்டு. இவ் வகையான கற்களை நம் நாட்டின் பல பாகங்களிலும் நாம் பார்க்கலாம்.

இறந்த வீரனுடைய உடம்பைப் புதைத்த மேடை மேல் கல் நாட்டி வழிபடுவதும் உண்டு; அங்ஙன மின்றிப், பலருங் காணும்படியான வழிக்கரை முதலான இடங்களிலும் கல் நாட்டு வதும் உண்டு. வழியோரங்களில் வீரனின் கல்லை நட்டால் எல்லா மக்களும் எளிதிற் பார்த்து அவ் வீரனுடைய பெயரை யும் புகழையும் அறிந்து கொள்ளுவர். அவர் அறிந்து கொள் வதோ டமையாது அவ் வீரனைப் போலச் செயற் கருஞ் செயல் செய்து புகழ் பெற வாழ்வர். இவற்றின் பொருட்டே பண்டைய தமிழ் மக்கள் வீரனின் கல்லை வழியோரங்களில் நாட்டலாயினர்.

வேங்கை முதலிய மலர்களைப் பனைக் குருத்தில் அமைத்துச் செய்யப் பெற்ற படலையைச் சூட்டி, மரல் நாரால் தொடுத்த கண்ணியை அணிந்து, மயிற் பீலி சூட்டிப் புனைந்தும் துடியென்

னும் வாத்தியம் முழங்க, தோப்பிக் கள்ளுடன் ஆட்டையும் பலி கொடுத்தும்; தூய நீராட்டி, நறு மலர் சாத்திப் பலியிட்டும் நெய்யை நெருப்பிலிட்டுப் புகைத்தும் நடு கல்லினுக்கு வழிபாடு செய்ததாக பழைய இலக்கியங்கள் கூறுகின்றன.

நீர்வளமில்லாத ஊரொன்றிருந்தது. அவ் ஆருக் கெல்லாம் ஒரே ஒரு கிணறு தான் இருந்தது. அக் கிணற்றிலும் சிறிது சிறிதாகவே நீர் சுரக்கும். அவ் வூரிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் அக் கிணற்றிற் சுரக்கும் நீரைக் காத்திருந்து சிறிது சிறிதாக முகந்து சேகரிப்பர். அங்ஙனம் உண்ணும் நீரே கிடைக்காமல் வருத்தப்படுகின்ற அவ் வூரிலே, ஒரு பெண் வாழ்கின்ருள். அவள் நற் குடியில் தோன்றியவள்; தன் மனத்திற் கொத்த வீர ஞெருவனைக் கணவனுகப் பெற்றிருக்கின்ருள்; அவனும் அவளும் அன்பாற் பிணைக்கப்பெற்று இல்லறம் நடத்துகின்றனர். அப்பொழுது, அவ் வூரிலே செயற் கருஞ் செயல் செய்து இறந்த வீர ஞெருவனுக்குக் கல் நாட்டி ஊரார் விழா வெடுத்தனர்.

அத் திருவிழாவைக் காணக் கணவனும் தானுமாகச் சென்ற அந் நங்கை, அந் நடு கல்லை வணங்கி இரண்டு வரம் கேட்கின்ருள். ஒன்று தனக்கு; மற்ருென்று தன் கணவனுக்கு. 'தன் வீட்டிற்குத் தவிராமல் நல்ல விருந்தினர் வந்துகொண்டே யிருக்க வேண்டு மென்பது' தனக்குக் கேட்ட வரம். 'செய்யும் போரிலே தோற்று, நாட்டையே திறையாகக் கொடுத்துச் செல்கின்ற சிறந்த பகைவன், தன் வீரக் கணவனுக்குக் கிடைக்க வேண்டும்' என்பது அவள் தன் கணவனுக்குக் கேட்ட வரம். தான், விருந்தினர்களைப் புரக்கின்ற அன்புடையவளாயிருக்க வேண்டும்; தனது கணவன் பகைவரை அழிக்கின்ற பெரு வீரனுக விருக்க வேண்டும் என்பன அம் மங்கை நல்லாளின் மனக் கோளாகும். இக் கருத்தை,

'அரி துண் கூவல் அங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகற் கைதொழுது பரவும்; ஒடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே; என் ஐயும்
.... வேந்தொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே.'

என்ற புறநானூற்றின் 306 ஆம் செய்யுள் குறிப்பிடுகின்றது.

மற்றொரு வீரத்தா யொருத்தி, தன் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தாள். அப்பொழுது தனது நாட்டில் பகைவர் பலர் புகுந்து போர் செய்கின்றனர் என்பதைக் கேள்வியுற்றாள். வீரக் குடியில் பிறந்து வீர எண்ணம் படைத்த அத் தாய் அப் போரினைப் பொருளாய், உடனே தன் குழந்தையைப் பாலுண்ணலினின்றும் நீக்கி, முன்பு பகைவரைக் குத்தி வளைந்திருந்த வேலை வளைவு நீக்கி அக் குழந்தையின் கையிற் கொடுத்து, தனது மறக்குடியில் முன்னோர்க்காக நடப் பெற்றிருந்த வீரக் கல்லைக் காட்டிப் போர்க்குச் செல்க என்று கூறினாள். அவள் அக் கல்லைக் காட்டியதின் குறிப் பென்ன? 'மைந்தனே! போரிற் சென்று பகைவர் புறமுதுகு காட்டியோடப் போர் செய்து திரும்பு; இல்லையேல் போரில் விழுப் புண் படப் போர் புரிந்து இறந்து, உனக்கும் ஒரு வீரக் கல் அமையும்படி செய்து கொள்; தோல்வியுற்று மட்டும் திரும்பாதே' என்பவை தாம் அவளின் சிறந்த மனக் குறிப்பாகும். இக் கருத்தை,

'வந்த படை நோனுள் வாயில் சுழில் பறித்து
வெந்திறல் எஃகம் இறைக்கொளீஇ—முந்தை
முதல்வர் கல் தான் காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு'

என்று புறப்பொருள் வெண்பாமாலை அழகாகக் கூறுகின்றது.

ஓர் இரவலன் மற்றொரு இரவலனைப் பார்த்து. இன்ன வழியாகப் போவென்று வழிகாட்டு மிடத்து, 'இரவலனே! நீ இவ் வறண்ட வழியிற் செல்லின் அங்குக் காணப்படும் வீரனது கல்லைக் கும்பிடாமற் செல்லாதே, அந் நடுகல் யாருடையதெனின்? பகைவர் வந்து பசுக் கூட்டத்தை ஓட்டிச் செல்ல, அதை மீட்க வந்த கல்லா இளைஞரெல்லாம் இடம் விட்டுச் செல்லவும் தான் மட்டும் செல்லானாய் நின்று, பகைவரின் அம்பு மாரியில் மூழ்கி, பெரு வெள்ளத்திற்கு இட்ட அணை போல நின்று, தடுத்து நிறுத்திய பெரியோன் கல்லல்லவா அது! அதை நீ வழிபட்டுச் செல்லின், நீ செல்லும் வழி வண்டுகளெல்லாம் மொய்க்கும்படிக் குளிர்ந்ததாயிருக்கும்' என்று கூறுகின்றான். இக் கருத்தை,

'.................. இரவல! சேறியாயின்
தொழாதனை கழிதல் ஓம்புமதி வழாஅது
வண்டுமேம் படூஉமிவ் வற நிலை ஆறே
பல்லாத் திரள் நிரை பெயர்தரப் பெயர் தந்து
கல்லா இளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்க
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே.'

என்று கூறுகின்றது புறப் பாட்டு.

செங்கோன் தரைச் செலவு

"செங்கோ."

திரு. A. ஞானரத்தனம், சாலைத்தெரு, இராமநாதபுரம்.

வானைத்தொடும் சிகரங்கள். அவற்றின் வயிற்றிடைத் தழுவிய மேகமண்டலம். முகில் உறங்கும் மரக்கிளைகள். அவைகளில் குலுங்கும் கனிகள். கனிகளைச் சிதைத்து விளையாடும் வானரக் கூட்டம். சிதைந்துவிழும் சுளைகளைப் பற்றப் பல கோணங்களில் பறந்திடும் பறவைக் கூட்டம். சுளையில் சொட்டும் தேனைப் பருக நிறைந்து நிற்கும் கரடிக் கூட்டம். அவை உண்டதுபோக மிஞ்சிய தேன் துளிகள் திரண்டு உருண்டு சிற்றோடையாய் வந்து கலந்திடும் பஃறுளியாறு.

ஒரு காரியத்தை 'யான் இவ்வாறு செய்து முடிப்பேன் தவறுமாயின் இறப்பேன்' என்று வஞ்சினங் கூறி: அக் காரியம் முடியாதாயின் வீரர் தாம் சொல்லிய வண்ணம் இறந்து விடுவர். இவர்கட்கு நாட்டப்பெறுங் 'கல் வஞ்சினக் கல்' என்று பெயர் பெறும்.

ஆண்களுக்காகக் கல் நாட்டி வழிபடுதல் போலவே, செயற்கருஞ் செயல் புரிந்து இறந்த பெண்களுக்கும் கல் நாட்டி வழிபட்டனர் பண்டைய மக்கள். அவருள் மணமாகாத பெண்களுக்கு நாட்டப் படுங் கல் (கன்னிக் கல்) என்றும், மணமான கற்புடைப் பெண்களுக்கு நாட்டப் படுங் கல் (பத்தினிக் கல்) அல்லது (மகா சதிக் கல்) என்றும் பெயர் பெறும்.

தமிழிலே அகப்பொருளிலக்கணங்களை நோக்கினால் அங்கு தலைவனுக்குப் பலவகைப் பிரிவு கூறப்பெற்றுள்ளன. அவற்றுள் 'அறப்புறம் காக்கப் பிரிதல்' என்பது ஒன்றாகும். 'அறப்புறம்' என்றால் கோவில், மடம், சத்திரம் முதலிய நல்லிடங்களாம். அவற்றைக் காத்தலையே சிலர், நல்லதோர் குறிக்கோளாகக் கொண்டிருப்பர். அவற்றிற்கு எவராலேனும் இடையூறு நேரிடின் முடிந்தவரை காத்து, முடியாதாயின் அப்போராட்டத்தில் அவர் தம் உயிரையே விட்டு விடுவர். அங்ஙனமிறந்த அவர் பொருட்டுக் கோவில் முதலான அறப்புறங்களின் முன்பு கல்நாட்டி வழிபடுவதுண்டு. இக்கல் 'சாவான் கல்' என்று பெயர்பெறும்.

இக்காலத்தும் செயற்கருஞ் செயல் புரிந்த பெரியோர்களுக்காக உருவச்சிலை நாட்டிக் கொண்டாடுகின்றோம். இப்படியே அன்றும் இன்றும் கல் நாட்டிப் பெரியோர்களைப் போற்றும் வழக்கம் பற்பல வகையாய் நம்நாட்டில் இருந்து வந்தன; இருக்கின்றன.

ஆற்றின் மருங்கில், புதுமணம் வீசி, தன் நிறங் காட்டி, பொன்னிற வண்டினங்களைத் தன்பால் அழைக்க, செவ்விதழ் திறந்து புன்முறுவல் பூத்துநிற்கும் பன்னிற மலர்கள். மலர்களில் மதுவுண்டு, உண்ட மயக்கத்தில், பூவிதழ் மெத்தையில், நாவற் கனிகளென உதிர்ந்து கிடக்கும் வண்டினங்கள். அம் மலர் மெத்தை யிடையே, முளைத்த செடிகளில், தழைத்த பூங்கொடிகளால் பின்னப்பட்ட பொழில் மண்டபம். அம் மண்டபத்தே மானினம் சூழ, குயிலினம் கூவ, மயிலினம் ஆட, கொலு வீற்றிருக்கிருள் ஓர் இளநங்கை. காலத்தையே உருவமாக்கி, இயற்கையின் எழிலையே வண்ணமாக்கித், தீட்டி உருவாக்கிய உயிரோவியம். இயற்கையின் சுழற்சியில் சிக்கிச் சிதைந்து அன்று, வளப்பத்தில் செழித்து வளர்ந்த பாவை. காலவெள்ளத்தின் மேருப் பள்ளங்களில் வழுக்கி விழுந்ததால் உண்டாகும் காயங்களோடன்று, இன்பம் பூரிப்பின் அன்புக் காணிக்கைகளோடு நிறைந்த மங்கை; தனித்த வாழ்வில் தழைத்து வளர்ந்தவள். மான் விழியோடு தன் வேல் விழிகொண்டு போர் தொடுத்துப் பழகியவள்; தோகை மயிலோடாடி, குயிலோடு குரல் பயின்று, அன்னத்தோடு அடியெடுத்துவைத்து, தென்றலோடு தோழமைகொண்டு, மலர்களில் புரண்டு விளையாடிப் பழகியவள். இயற்கையில் ஒன்றி இன்பம் துய்த்துக் கொண்டிருந்த எழிலரசி, அந்நாட்டு இளவரசி. அவள் ஆணையை நிறைவேற்ற எண்ணிலடங்கா யானைப் படையும், அவற்றை இயக்கிச் செல்ல ஏறுகளும், ஏவலுக்காகக் காத்துக் கிடந்தன. அவள் நிதிக் கிடங்குகளில் இடமின்றி, கடற் கரைகளில் முத்தும்,காடுகளில் பொன்னும், பவளமும் மின்னெளி வீசின. இம் மண்ணில் பிறந்த அம்மகள் தன் இச்சைப்படி சுற்றித் திரியும் பச்சைக் கிளியாய் பலவிடமும் சுழன்று, தனியாட்சி செய்து வந்தாள். ஆதலின், அந்நிலத்தில் கள்ளச் செயல்புரியும் குள்ள நரி வாழ்ந்ததில்லை, இருட்டில் வேட்டையாடும் கோட்டான்கள்குடியிருந்ததுமில்லை. முன்னுல் விட்டுப் பின்னுல் தாக்கும் ஓநாய்க் கூட்டம் அத்திக்கில் அடி எடுத்து வைத்தது கூடக் கிடையாது. தன் உடலழகைக் காட்டி, படத்தை ஆட்டி, விடத்தை யூட்டும் நச்சுப் பாம்புகள் அத்திசையிலேயே கிடையா. எத் திக்கு நோக்கினும் இனிய காட்சிகள். தன்னைப் பற்றிப் படரும் கொடியைத் தாங்கும் அடர்ந்த தருக்களின் அரவணைப்பும், முதிர்ந்த கனியை அலைந்து திரியும் உயிரினங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் அன்புப் பெருக்கும், அதன் நிழலில் தங்கி, மகிழ்ந்து குலாவிடும் உயிரினங்களின் கனிந்த வாழ்வும், அப்பொழிலின் அமைதிக்கு அணி செய்வனவாயின. இவ்வமைதியில் பெருமகிழ்வு கொண்டிருந்தாள் அப்பேதை. ஆனுல் இன்று என்றுமில்லாதபடி பொழில் மண்டபத்திற் கெதிரே யிருந்த பெரும் வனத்தின் புறத்தே பேரொலி யுண்டாயிற்று.

ஆம்! என்றுமே மனித அடி பட்டறியா மலைச் சாரலி லும் மனிதர் கூட்டம் புகுந்து விட்டது. இயற்கையையும் தம் இச்சைப்படி மாற்றியமைக்கும் மனித கூட்டத்தால் அமைதியுட னிருந்த அச் சோலை அல்லோல கல்லோலப் பட்டது. உட் புக வழி விடா முட் புதர்கள், சுட்டுப் பொசுக்கப் பட்டன. பின்னி வளர்ந்த பெருந் தருக்கள் பிரிக்கப் பட்டன. பூத்துக் குலுங்கிய பெரும் மரங்களெல்லாம் புது வழி யமைக்கப் பிடுங்கி எறியப் பட்டன. மேடு பள்ளங்கள் மட்ட மாக்கப் பட்டன. பெருங் குரலோடு புது வழி யமைத்துக் கொண்டு அவ் வனத் திடை புகுந்தது பெரும் படை. அப் பெரும் படைக்குத் தலைமை வகித்து வழி நடத்துகிறான் ஓர் இளைஞன். அவன் ஓர் அரசன் என்பதை அவன் பவனி வரும் பட்டத்து யானை வெள்ளிடை மலை போல் விளக்கங் கொடுத்தது. அவனுடைய அகன்ற நெற்றியும், விரிந்த மார்பும் அவனை ஓர் அறிஞனும் வீரனும் என்று பறை சாற்றின. அவன் ஆணவப் போக்கில் மிதிபட்டு நசுங்கிய தருக் கள், தழைகளெல்லாம் வாய் விட்டலறின. பிறர் மகிழ்விற் கன்றி பிறிதொரு பயனுங் கருதிப் பிறந் தறியாத் தருக்களின் அலறற் குரல் கேட்டு அவ் விள நங்கை குமுறினாள்; கொதித் தாள்; கொந்தளித்தாள்.

தன்னாட்சிக் குட்பட்ட, தனக்கே உரிமை யான தன்னிடம் புண்ணாக்கப் படுவதைக் கண்டாள். கருத்து இருண்டது. சற்று நேரத்திற்கு முன் அசைவற்றிருந்த அவள் உள்ளம் சிதறியது. இனியாள் எரிமலை யானாள். எதிரே வரும் படையை இமைக் கும் பொழுதில் அழிக்கும் ஆவேசங் கொண்டு இருக்கையை விட் டெழுந்தாள். அண்டியிருந்த மானினம் மருண்டு வெருண்டது; ஆனால், அருகே நின்ற வெம் கரிகள் வீர் கொண் டெழுந்தன. அழகிய அன்னங்கள் மயங்கின; ஆனால், அண்மையிலிருந்த சிங்கங்களோ தங்கள் செம் பிடரி மயிர் சிலிர்க்க நிமிர்ந் தெழுந் தன. மயிலினங்களோ நடுங்கிக் 'கிடு கிடு'த்தன; ஆனால், மறைவில் உலாவிய வேங்கைகள் தம் கோரப் பற்களைக் காட்டி நாவைச் சுவைத்தன, நல் விருந் தெதிர் நோக்கி. தன் கை யசைப் பிற்காகக் காத்து நிற்கும் அப் படை யிடையே, கோபக் கனல் வீச, கொந்தளித்து நிற்கும் அவ் வணங்கைக் கண்ட அப் பெரும் படை, விழித்த கண் வாங்காது, கண்ட கண்ட விடத்தே செய லற்று நின்று விட்டது. சென்ற விட மெல்லாம் தன்னைச் சுற்றி வந்து, சாதனைகள் பல சாதித்த, தன் படை, செய லற்று நிற் பதைக் கண்டும், கலங்கினா னில்லை அவ் வட லேறு, யானை மீதிருந்து தரையில் பாய்ந்தான். சீறி நிற்கும் சிறுத்தையிட மிருந்து தன் சேயை மீட்கத் துணிந்து செல்லும் தாயைப் போல் அவ் விள நங்கையை நோக்கி நடந்தான்.

'நில்!' என்ற சொற் சுடர் அவள் பற்களுக் கிடையே அகப்பட்டு வெளியே வந்து விழு முன், அவள் கண்களிலிருந்து சிதறிய கனற் பொறியும், நாசியிலிருந்து வீசிய அனல் வீச்சும் அவனைத் தாக்கிற்று. தாக்குதலால் துவண்டு விடவில்லை அவ் வீரன். தயக்கமும் மயக்கமு மின்றித் தலையை உயர்த்தி நெஞ்சை நிமிர்த்தித் தன் எதிரே நிற்கும் இள நங்கையை நோக்கி, 'அணங்கே!' உன் அனற் பொறியில் அகப்பட்டுச் சாம்பலாகும் சோம்பேறி யல்ல நான். உன் அனல் மூச்சில் பற்றி எரியும் பதரும் அல்ல நான். சுடச் சுட வீசும் உன் சொற் கேட்டு நடுங்கும் பேடியு மல்ல நான். உன் படை கொண்டு தடை செய்யப்படும் பணி கொண்டவனு மல்ல நான். என் பணிக்கு இடையூறு விளைவிக்கும் ஈ எறும்பைக் கூட இவ் வையகத்தில் வாழ விடமாட்டேன். ஆதலின் குறுக்கிடாதே!' என்று முழங்கினன்.

எவ் வொளியும் இணையிலா மின் னொளி வீசி, இடி யோசை எழுப்பும் மேகம், காற்றுத் தாக்கின் கடிதிற் குளிர்ந்து, கார் பொழியுமாப் போல், இம் மொழி கேட்ட அம் மடந்தையின் குவிந்த இதழ்கள் விரிந்தன. அவ் விதழ்களுக் கிடையே சிதறி வீழ்ந்தன இச் சொற் சிதர்கள்! 'என் மொழி பேசும் குழந்தாய் வா!'. 'உன் மொழி பேசும் குழந்தை.........நான்' என்று நா வுந்த நழுவிய சொற்களோடு உற்று நோக்கினன். கோர ரூபம் குலைந்து அன்புருவாய்த் தன் முன் நிற்கும் அக் கன்னியை. 'ஆம்! என் தாய்.........கன்னித் தாய்.........தாயே! பிழை பொறுத் தருள்.' என்று கூப்பிய கரங்களோடு அவள் பாத கமலங்களில் விழுந்து பற்றிப் பிடித்துக் கொண்டான். 'மகனே! உன்னை வேற்றவன் என்று வெகுண்டு வேதனைக் குள்ளாக்கி விட்டேன். எழுந்திரு!' என்று வாரி எடுத்தாள். தன் படையைக் கை யமர்த்தினள். மகன் படையை, இளமை பொங்கும் அவ் வனத் தின் புனலில் மூழ்கி, பொழிலில் உலாவி, காய் கனி சுவைத்து மனங் களிக்க அனுமதித்தாள். பின்பு அவனிடம், 'மகனே! எங்கிருந்து வருகிறாய்?' என்றாள்.

'இலா முரி நாட்டிலிருந்து, தாயே!'

'உன் பெயர்?'

'செங்கோன்'.

'செங்கோல் செல்வனே! எப் பணி செய்ய இப் பெரும் படையுடன் புறப்பட்டாய்?'

'தாயே! பெரும் படையும் பட்டத்து யானையும்தாம் தங்களை வெகுண்டெழத் தூண்டிற்ருே?' 'ஆம் செல்வ! ஏனெனில், வீணர்களின் மண் வெறி வீரர்களின் நீரத்தை வீணுக்கி, அவர்களின் இரத்தத்தை நீராக்கி, அவனியிற் பூசி. அவ் விரத்தக் கறையேறிய நாடனைத்தையும், தம் ஆட்சிக் குட் படுத்த தூண்டுவதில்லையா? ஆதலின், இரத்தக் கறை பட்டறியா' இத் தூய பூமியும் திட்டுப்பட்டு விடுமோ வென ஐயுற்றேன்,

'தாயே! உன் பிள்ளைகள் மானங் காக்க மாள்வர். நீதி காக்க நெடுஞ் சமர் புரிவர். இனங் காக்க எழும்புவர். உன் நிலை காக்கப் பொருதுவர். ஆனல், மண் வெறி கொண்டு போரிட்டவர் இருந்தது மில்லை; இனி இருக்கப் போவது மில்லை.'

'மகிழ்ந்தேன், மைந்தா! மகிழ்ந்தேன். நீ இப் பெரும் படையுடன் புறப்பட்டு வரக் காரணம்?'

'அம்மா! மனித குலமே இம்மண்ணில் தோன்ற. தோன்றிய யாவரும் நின் மொழி பயின்று வாழ, பன் னெடுங் காலமாய் பல னளித்து வந்த என் நாடு வளர்ந்து முதிர்ந்து விட்டது. முதிர்ந் ததை அறுக்க ஆழிச் செல்வன் ஆத் திரங் கொள்கிருன், பேரெழில் கொண்ட என் நாட்டைக் கண்டு பொருமை கொள் கிருன். நினையா நேரத்திற் புகுந்து தன தாக்கிக் கொள்ளத் துடிக்கிருன்.'

'அரற்ருதே மகனே! சீறி எழும் ஆழியின் செயலைத் தடுத்தால், அவன் ஆக்க வேலையால் அவனியிற் தோன்றப் போகும் பிறிதோர் இடம் பெரும் அல்லலுறும். மேலும், முதிர்ந்த உன் நிலம் மீண்டும் வள மடைய ஆழிச் செல்வன் ஆட் கொண்டு தாருக வேண்டும். அவனே முதுமையை இளமை யாக்கும் வல்லான். ஆதலின், இடம் விட்டுக் கொடுக்க வேண்டியதே நின் கடன்.'

'அறிவேன், தாயே. அவ் வுண்மையை, ஆகையால் தான் இப்பெரும் படையுடன் புறப்பட்டேன், அதற் கிணையான ஓர் இடங்காண.'

'கண்டாயா புது இடம்?'

'ஆம், தாயே! தாங்கள் கண்ட இப்புது இடமே—இனிமையும் இளமையும் பொங்கி வழியும் இக்குமரி நாடே—நான் கண்ட புது இடம். இப்புது இடத்தில் உன்னைச் சந்திக்க வழி வகுத்

தளித்து, பேருதவி புரிந்ததே இப்பெரும் படை. இனி இந் நிலப் பரப்பையே உன் பிள்ளைகளின் நிலைத்த உறைவிடமாக்க உறுதி கொண்டு விட்டேன்.'

'நன்று! நன்று!! குழந்தாய்! என் பிள்ளைகளின் வாழ்விற்குப் புதுவிடம் காண—ஏன்? என் வாழ்விற்கே புது விடம் காண வந்த செல்வனே! இனி வாழ இதுவே தகுந்த இடம். நீ வேறு திசையில் சென்று என் மக்களை வேற்று நாட்டிற்குக் குடியேற்றி விடாமல், விரிந்த உன் நிலத்தின் வடபால் வந்து, எனக்கும் என் மக்களுக்கும் உறைவிடம் கண்ட உத்தமனே! வா! உனக்கு இவ்விடத்தின் எதிர்காலப் பெருமையைக் காட்டுகிறேன்,' என்று கூறிய குமரி, செங்கோன் கரம் பற்றி அவனை அம்மலையின் தென் முடிக் கழைத்துச் சென்று, அங்கிருந்து அந்தப் பரந்த நிலப் பரப்பைக் காட்டிக் கூறினுள்; 'அதோ பார்! கதிரவன் தோன்றும் கிழ்த் திசையை. அப் பொன்னெளியில் மின்னும் மரகதப் புல் வெளியைப் பார்! உணவளிக்கும் அந் நாட்டிடையே உலகம் அறம் வகுக்க, மறை யளிக்கும் திரு மகன் பிறப்பான். இதோ! முத்துக்களை யள்ளி நம் மீது வீசும் இப்பகுதியில் தென்னவன் தோன்றி நின் பணி தொடர்வான். அதோ! தெங்கும் பாக்கும் நிறைந்து நிற்கும் மேற் றிசையைப் பார்! இங்கொரு இளவல் என் சீறடிக்குச் சிலம்பளிப்பான். எதிரே தோன்றும் குன்றுகளில் என் பெயர் சொன்னவர்க்கெல்லாம் பொன்னும் மணியும் அள்ளிக் கொடுக்கும் வள்ளல்கள் தோன்றுவர். இப்பரந்த வெளியிலே சிந்தைக் குகந்த மணி களும், செவிக்கினிய குண்டலங்களும், கருத்தையள்ளும் காவியங்களும், அகமும் புறமும் தோற்றுவிக்கும் பாவலரும் நாவலரும் தோன்றுவர்.'

'அறிந்தேன், தாயே! அதற்கும் வடக்கே தோன்றும் அம்மலை.'

'அதுவா! அது தான் வேங்கடம்.'

'அதற்கும் வடக்கே நாடுண்டா தாயே!'

'உண்டு' மகனே! அது போக பூமி. பின்னல் சமயம் வாய்த்தால் அதைப் பற்றிச் சொல்கிறேன்.'

'தாயே! ஆழியின் சீற்றத்தால் அழிந்திடுமே நின்மொழி மாண் டிடுவரோ நின் மக்கள் என்றஞ்சினேன். அவர்களைக்

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

நன்கு ஆராய்ந்த மேனாட்டு ஆங்கிலேயர் வில்லியம் லோகன் (William Logan) என்பவர் 'உண்மைக்கு மாறாகப் பொய் நிறைந்த கதை செறிந்த இந் நூல்களை இந் நாட்டு வேதியர் கள் தங்கள் நலமே பெரிதும் கருதிப் பாதுகாக்கப்பட்டு நிலை பெறும் பொருட்டு வெறிதே புனைந்துரையாக அமைத்துக் கொண்ட புளுகு மூட்டை யென மனம் வெதும்பிக் கூறியிருக் கின்றார்.'[1]

வடநாட்டு அசோக மன்னனுடைய கல்வெட்டுக்களும் 'சோள பலிய சத்திய புத்திர கேரளபுத்திர தம்பபானி' என்று குறிக்கின்றன. இதனால் கி. மு. மூன்றாம் நூற்றாண்டி லேயே சேரநாடு கேரளநாடாக வடவரால் வழங்கப்பெற்ற தென்பது விளங்குகிறது.

அக் காலத்தில் மேலைநாட்டிலிருந்து கிரேக்கரும் யவன ரும் பிறரும் மேலைக் கடலில் கலஞ் செலுத்தி வரலாயினர். எகிப்து நாட்டு வேந்தர் கீழ் வாழ்ந்த போனீசியர்களே முதற் கண் அரபிக் கடலில் கலஞ் செலுத்தி நாடு காணும் நாட்டம் கொண்டனர். அவர்களுடைய முயற்சி முற்றும் வாணிகம் செய்து பொருளீட்டுவதிலேயே கழிந்தமையின், அவர்களது குறிப்பு கிடைப்பது அரிதாய் விட்டது. கி. மு. ஐந்தாம் நூற் றாண்டில் கிரேக்கர்கள் முற் போந்து கடலகலம் காண முயன்றனர். தொடக்கத்தில் அவர்கள் மத்தியதரைக் கடலை யும் கருங் கடலையும் அகலங் கண்டனர். அந் நாளில் அலக்

1. W. Logan's Malabar Manual, p. 246.

குடியேற்றப் புது இடம் காணவே புறப்பட்டேன். கண்டேன் இத்தூய பூமியை. அக்கடலின் கொந்தளிப்பிற்குமுன் கரை சேர்த்திடுவோம் யாவரையும் இத் தமிழகத்திற்கு. என் பணி வெல்ல இனிது துணைநின்ற தமிழ்த் தாயே! வணக்கம்.'

'மகனே! செங்கோன் தரைச் செலவு நான் உள்ளளவும் நிலைத்திருக்கும். போய் வா.'

சாந்தர் விடுத்த கிரேக்கர்கள் கிழக்கே சிந்து நதி பாயும் நாட்டைக் கண்டுகொண்டு திரும்பினர். அவர்கட்குத் தலைவனுய்ச் சென்ற நியார்க்கஸ் (Nearchus) தரை வழியாகச் சிந்து நதிக்கும், டைகரீஸ், யூபரேடிஸ் ஆற்றுக்கும் இடையிலுள்ள நிலப் பகுதியில் ஒரு வழி கண்டான். அது முதல் நமது இந்திய நாட்டின் செல்வ நிலை கிரேக்கர் உள்ளத்தில் நன்மதிப்பை யுண்டு பண்ணிற்று. அலக்சாந்தருக்குப் பின்பு செல்யூகஸ் நீகேட்டர் விடுத்த மெக்ஸ்தனீஸ் என்பார் கங்கை நாட்டுப் பாடலிபுரத்தில் (Patibothrac) சந்திரகுப்த வேந்தன்பால் தங்கித் தாம் அங்காளில் கேள்வியுற்ற செய்திகளைக் குறித்துவைத்தார். அக் குறிப்பினுள் சேர சோழ பாண்டியர்களைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அவற்றுள் சேர்மா (chermae) என்பது சேரமான்களையும் நரு (Narae) என்பது சேரநாட்டு வடபகுதியான குட நாட்டு நறவூரையும் குறிப்பனவாம்.[1]

பின்னர் எகிப்து நாட்டை யாண்ட தாலமிகள் செங்கடல் வழியாக இந்திய நாட்டுக்கு வழி கண்டனர். அவர்கட்குப் பின்பே யவனர் தோன்றி நமது இந்திய நாட்டோடு வாணிகம் செய்யத் தலைப்பட்டனர். அவர்களில் இப்பலஸ் (Hippalus) என்னும் கிரேக்கன் நம் நாட்டில் அடிக்கும் தென்மேற்குப் பருவக் காற்றின் நிலையையும் வடகிழக்குப் பருவக் காற்றின் நிலையையும் கண்டுரைத்தான். அப் பருவக் காற்றை அவர்கள் இப்பலஸ் என்றே நெடுநாள்காறும் வழங்கி வந்தனர்.

அரபிக் கடலில் அரபியரும் இந்தியரும் கலஞ் செலுத்தி வாணிகம் செய்து வந்தனராதலால் அவர்கள் இப் பருவக் காற்றை அறியா திருந்தன ரென நினைத்தற்குச் சிறிதும் இடமில்லை. கி. மு. ஆறும் நூற்றாண்டில் (கி. மு. 556—539) ஆட்சி புரிந்த சால்டிய வேந்தனான நபோனிதாஸ் (Nabonidas) காலத்தேயே இந்தியரது கடல் வாணிகம் சிறந்து விளங்கிற்று; சிலர் கி. மு. ஏழாம் நூற்றாண்டிலேயே இந்திய நாட்டு மேலைக் கடற் கரைக்கும் மேனாட்டுக்கும் இடையே பெரு வாணிகம் நடைபெற்ற தென்று கூறுகின்றனர்.[2]

---

1. Nagam Iyer's Travancore Manual, Vol. i, p. 238.
2. W. Woodburn Hyde's Ancient Greek Mariners, P. 206.

இக் கடற் காற்றின் இயல் பறிந்து பண்டைத் தமிழ் மக்கள் கடலிற் கலஞ் செலுத்திச் சிறந்த பெருஞ் செயலைப் புறப்பாட்டு [1] கூறுவது ஈண்டு நினைவு கூறத் தக்கது.

இக் காலத்தே மேனாட்டுக்குத் தென் தமிழ் நாட்டினின்று தூதொன்று சென்று யவன வேந்தனான அகஸ்டஸ் என்பாருடன் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்றது. இத் தூது போரஸ் என்னும் வடநாட்டு வேந்தன் விடுத்த தென்றும், தென் பாண்டி நாட்டு வேந்தன் விடுத்த தென்றும் கூறுவர் [2].

இவ்வாறு மேலை நாட்டவர்க்கும் தென்றமிழ் நாட்டவர்க்கும் இடையே வாணிகம் மிகுதிப்பட்டது. அதனால், யவன நாட்டினின்று தமிழ் நாட்டுக்கு வரும் மரக்கல மாக்கட்கென யவன நாட்டில் நூல்கள் எழுந்தன. அவற்றுள் எரித்திரையன் கடல் யாத்திரை (Periplus of Erythraean Sea) என்ற இரு நூல்கள் தோன்றின. அவற்றுள் ஆசிய நாட்டுக் கடல் யாத்திரை ஒன்று[3]; மற்றொன்று ஆப்பிரிக்க நாட்டுக் கடல் யாத்திரை.[4] இது கி. மு. முதல் நூற்றாண்டில் தோன்றிய தென்பது அறிஞர் கொள்கை. இம் முதல் நூற்றாண்டுக்கு முன்பே தென் றமிழ் நாட்டவர் சிலர் ஐரோப்பாவைச் சுற்றிச் சென்று வட கடலில் ஜர்மனி நாட்டருகில் உடைகலப்பட்டு இறந்தன ரென்றொரு செய்தி ஜர்மானியருடைய நூல்களில் காணப்படுகிற தென அறிஞர்கள்[5] கூறுகின்றனர். வட கடலில் இறந்தோருள் அரச குமரனும் ஒருவன் எனப்படுவதால் அவன் கடலுள் மாய்ந்த பெருவழுதி தானோ என்றோர் ஐயம் உண்டாகிறது. கி. பி. முதல் நூற்றாண்டில் பிளினி (Pliny) என்பார் மேலைக் கடலில் செல்லும் செலவு பற்றி நூலொன்றை எழுதியிருக்கின்றார். அதன்கண் இக் கடற் செலவு பற்றிய செய்திகளும் மேலைக் கடற்கரையிலிருந்த பேரூர்கள் பலவும் விரியக் கூறப்பட்டுள்ளன.

கி. பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பெட்ரோனியஸ் (Petronius) என்பார் அந் நாளைய யவனச்

---

1. புறம், 66.
2. W. Logan's Malabar Manual, P. 251.
3. Woodburn Hyde's Ancient Greek Mariners, P. 215—232.
4. I bid. P. 209—214.
5. W. Logan's Malabar Manual, P. 252.

செல்வ மகளிரின் பெருமித வாழ்வைக் கண்டித்து எழுதிய நூலொன்றில், நம் நாட்டினின்றும் யவனர் கொண்டு சென்ற மெல்லிய ஆடை யுடுக்கு மாற்றால் தங்கள் மேனி வனப்பைப் புறந் தெரியக் காட்டிப் பொலி விழக்கின்றன ரென்றும், அவ் வாடைகள் காற்றாலாகியவை (woven wind) முகிலாடை (a texture of cloud) என்றும் குறித்துள்ளார். அவர் கூற்று 'புகை முகந்தன்ன மாசில் தூவுடை' என்றும், 'ஆவியந் துகில்' என்றும் சங்க நூற் கூற்றுக்களால் வற்புறுத்தப் படுவது காண்க.

கி. பி. 23—79 ல் வாழ்ந்த பிளினி (Pliny) என்பார், மேலைக் கடற் செலவு பற்றி ஒரு நூலெழுதினர். அந் நாட்கு முன்பே, நம் நாட்டவர் சிலர் ஐரோப்பாவைச் சுற்றிச் சென்று வட கடலில் ஜர்மனி நாட்டருகில் உடைகலப் பட் டொழிந்தன ரென்றொரு செய்தி அவர் நூலிற் காணப்படுகிற தென்பர்.[1] இவர் நூலின்கண் கடற் செலவு பற்றிய செய்திகள் பல விளக்கமாகவும், விரிவாகவும் உள்ளனவாம்.

'எகிப்து நாட்டு ஓசலிஸ் (Ocelis) துறையினின்றும் புறப்படும் கலம் தென்மேற்குப் பருவக் காற்றைத் துணைக் கொண்டு நாற்பது நாட்களில் முசிறித் துறையை யடையும்; அத் துறைப் பகுதியில் கடற்கொள்ளைக் கூட்டத்தினர் உளர்; (அவர்கள் நித்திரியாஸ் (Nitrias) என்ற விடத்தில் உறைபவர்.) இம் முசிறித் துறை வணிகப் பொருள் மிகுதியாக வுடைய தன்று; மேலும், கலம் நிற்கும் இடத்துக்கும் முசிறிக் கரைக் கும் நெடுந் தொலை யுண்டு; பொருளைச் சிறு சிறு படகுகளிற் கொணர வேண்டும்; நான் சொல்லும் காலத்தில் அப் பகுதிக் குரிய வேந்தனைச் சேலபோத்ராஸ் (Caelobothras) என்றும், இத் துறையிலும் வேறொரு நல்ல துறை நியாகிண்டி (Neacyndi) நாட்டி லுள்ள பாரேஸ் (Barace); அதற்குரிய வேந்தன் பாண்டியன் (Pandian); அவன் உள் நாட்டில் மதுரை (Madura) நகரிலுள்ளான் என்றும், பாரேஸ் துறைக்குக் கோட்டநாரா (Cottanara) விலிருந்து மிளகுப் பொதிகள் வருகின்றன என்றும் பிளினி (Pliny) என்பார் எழுதியுள்ளார்.

1. W. Legan's Malabar Manual P. 252.

பிளினியினுடைய குறிப்புக்களால், கி. பி. முதல் நூற்றுண்டில் சேர நாடு தென் கொல்லம் வரையில் பரந்திருந்த தென்றும், அதன் தென் பகுதி தென் பாண்டி நாடென்றும் தெளிவாய் விளங்குகின்றன.[1] இவ் வகையில் பெரிப்புளூஸ் என்ற நூல் கூறுவதும் ஒத்திருக்கிறது; ஆயினும் பெரிப்புளூஸ் ஆசிரியர், முசிறித் துறை செல்வத்தாற் சிறப்புடைய மாநகரம் என்றும், வட நாடுகளிலிருந்தும், எகிப்து நாட்டிலிருந்தும் எப்போதும் கலங்கள் வருவதும் போவதுமாக உள்ளன என்றும் எடுத்துரைக்கின்றூர்.

அக்கூற்று,

> 'சேரலர், சுள்ளியம் பேராற்று வெண்ணுரை கலங்க
> யவனர் தந்த வினைமாண் நன்கலம்
> பொன்னெடு வந்து கறியொடு பெயரும்
> வளங்கெழு முசிறி'[2]

என்ற சங்கநூற் கூற்றென்றால் பெரிப்ளூஸ் கூறுவது[3] வலியுறுகிறது.

கி. பி. 126-61ல் இருந்த தாலமி (Ptolemy) எழுதியுள்ள குறிப்பில் சேர வேந்தர் கேரளபோத்திராஸ் (Kerala bothras) என்றும், அவர்களது தலைநகர் காவ்ரா (Karoura என்றும் காண்கின்றோம்.[4]

கி. பி. 226 அளவில் எழுதப்பட்ட தெனப்படும் பியூட்டிங்கர் தொகை நூல் எனப்படும் நூல் (Peutingar Tables) முசிறியில் யவனர் இருக்கையொன்றிருந்த தென்றும் அகஸ்டசுக்குக் கோயிலொன்றிருந்ததாக அதனை யவனப் படையிரண்டு காத்து வந்ததென்றும் கூறுகிறது[5]; ஆனல் முசிறி நகரைப் பற்றிக் கூறும் சங்க நூல் யாதும் இதனைக் குறிக்கவில்லை.

---

1. W, Logan's Malabar Manual, P. 253.
2. அகம், 149.
3. M'Crindle's Translation of the Periplus Maris Erythroe P. 53-6.
4. W. Logan's Malabar Manual, p. 254.
5. Ibid p. 256.

இனி, சங்க இலக்கியங்கள் யாவும் சேர நாட்டைச் சேர நாடென்றும், அந்நாட்டு வேந்தர்களைச் சேரரென்றும், சேரலர் என்றும் தவறுபாடின்றிக் குறிக்கின்றன. பிற்காலத்து நூல்களும், அந்நெறியில் வழுவுதல் இல்லை. வடநாட்டு வட மொழி நூல்களுள் வேதமும், இராமாயணமும் சேரர் என்றே குறித்துள்ளன. ஆனால், அசோக மன்னனுடைய கல்வெட்டுக்கள் சேரர்களைக் கேரள புத்திரர் என்று குறிக்கின்றன. இக் கேரள புத்திரர் என்று குறிக்கும் சொற்றொடர் சேரல புத்திரரென்றும் படிக்கத் தக்கதாக உளது; ஆயினும் கேரள புத்திர ரென்றே இது காறும் அறிஞர் பலரும் படித்து எழுதி யிருக்கின்றனர். இடைக் காலச் சோழ வேந்தர் கல்வெட்டுக்கள் தாமும் சேரர்களைக் கேரள ரென்று கூறுகின்றன. இதனால் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பே கேரளம் என்ற வழக்கு உண்டாய்விட்டது தெரிகிறது. ஆனால், கி. பி. ஏழாம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தர் முதலியோர் திருப்பதிகங்களுள் சேரர் என்ற பெயரே காணப்படுகிறது. ஆகவே, கேரளம் என்ற வழக்குத் தமிழகத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பின் கல்வெட்டுக்களிலும், பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் செய்யுட்களிலும் நிலவுவதாயிற் றென்பது புலனாகும்.

வடநாட்டில் சேரலர் என்பது கேரளர் என்று மாறி வழங்கும் முறை நெடுங்காலத்துக்கு முன்பே தோன்றிவிட்டது. அசோகனுடைய கல்வெட்டுக் கூறுவது கேரளம் என்பதே யாயின், இரண்டாயிர மாண்டுகட்கு முன்பே சேரலர் கேரளரென வடவரால் வழங்கப்பட்டன ரென்பது தெளிவாம். மேனாட்டுக் கிரேக்கர்கள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரையிலும் சேரமான்கள் என்றே சேரர்களைக் குறித்து வழங்கி யிருக்கின்றனர்.

வேத காலத்துக்குப் பின் வந்த வடவர் பால் தாங்கள் புதுவதாகக் காணும் நாடு நகரங்களின் பெயரையும் மக்கள் இனத்தின் பெயரையும் தாங்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் இருநெறிகள் கொண்டுள்ளனர். ஒன்று அப்பெயர்களை மொழிபெயர்த்துக் கொள்வது. பாண்டி நாட்டுக் கூட்டு வாயிலைக் கபாடபுரமென வான்மீகியார் மொழிபெயர்த் துரைப்பதும், பின் வந்தோர் அதைப் பின் பற்றி ஊர்ப்பெயர்களை மொழிபெயர்த்துக்கொண்டிருப்பதும்

இதற்குத் தக்க சான்று. மற்றொன்று, தமது மொழி கடைக் கேற்பத் திரித்துக்கொள்வது. தென்றமிழ் நாட்டு முத்துக்களை முத்த மெனவும், சோழனைச் சோடனெனவும், இவ்வாறே, பிறவும் வழங்குவது இதற்குச் சான்றும். இவ்வாறே, சேரலர் என்பது கேரளர் எனவும், அவரது நாடு கேரள மெனவும் வடவரால் வழங்கப்பட்டமை[1] இன்றும் சேரநாட்டவர் தம்மைக் கேரளரெனக் கூறிக் கொள்ளுதற்கு ஏதுவாயிற்று.

இனி, சேரநாட்டுச் சேரலர் கேரளரெனத் தம்நாட்டிலே தம்மை வழங்கத் தலைப்பட்ட காலம், தமிழ்மொழி சிதைந்து மலையாளமாக மாறிய கால மெனவும், சேரநாடு என்றும் குடமலை நாடென்றும் வழங்கிய காலம் தமிழ்மொழி சிதையாது நிலவிய கால மெனவும் அறிந்துகொள்ளலாம். இடைக் காலத்தில் சேர நாட்டுப் பகுதிகளில் காணப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் பலவும் ஊர்ப்பெயர்கள், மக்கட் பெயர்கள் ஆகியவற்றைத் தூய தமிழிலேயே குறிக்கின்றன. பரோலா என்னுமிடத்துக் கல்வெட்டு, 'புலவேர் வாயில்'[2] எனவும், திருவன்னூர்க் கல்வெட்டு அவ்வூரைத் 'திருமுன்னூர்'[3] எனவும் கூறுவதைக் காணலாம்.

இவ்வண்ணம், சேர நாட்டவர் தம்மைக் கேரள ரென வழங்கத் தலைப்பட்ட காலத்தில் கேரளோற்பத்தி, கேரள மகாத்மியம் என்ற இரு நூல்களும் கூறும் செய்திகளுட் சில நிகழ்ந்திருக்கலாம். இந் நூல்களில் விசயநகர வேந்தர் குறிப்புக்களும் காணப்படுதலின், இவை மிகவும் பிற்பட்ட காலத்தே எழுதப்பட்டவை யென்பதும் தெளியப்படும். படவே, இவற்றால், இன்றைய கேரள நாடு சேர நாடாய்த் திகழ்ந்த கால நிலையை உணர்வ தென்பது அரிது.

இந் நிலையில், சேர நாட்டுச் சேரர் வரலாறு காண்டற்குச் சங்க காலத் தமிழ் நூல்களின் வேறாகப் பிற நூல்கள் இல்லை யாதல் காணப்படும். ஆதலால், சங்க காலச் சேரர் வரலாறு ஆராயும் நமக்குச், சுற்றிப் போயும் சுங்கச் சாவடிக்கே வந்தாற் போல என்னும் முறைமைப்படி, சங்க இலக்கியங்களே துணையாகின்றன.

---

1. காத்தியாயனர், பதஞ்சலி முதலியோர் கேரள ரென வழங்குவர்.
2. S. I. I., Vol V, No. 788. 3. Ibid, Vol V, No. 784.

புகழ் பெற வேண்டித் தயானு தேவி கோயிலைத் தீக்கிரையாக்கிய யவனனைப் போல ஆராய்ச்சி யுலகிற் புகழ் பெற வேண்டித் தம் செல்வாக்கும் மனமும் துணையாக அல்லாதன கூறும் சிலர் உரைப்பனவற்றை விலக்கி, உண்மை காண வேண்டும் என்னும் ஒள்ளிய உள்ளமும் முயற்சியும் துணையாக உழைத்துள்ள அறிஞர் ஆராய்ச்சி யுரைகளை மேற்கொண்டு சங்க நூல்களை ஆராய்வது அறிஞர் கடமை யாகும்.

மேனுட்டு யவனர்களும் வட நாட்டு வேதம், பாரதம் முதலிய நூல்களும் கூறுவனவற்ருல், சேரரது தொன்மை வேத காலத்தே விளங்கியிருந்தமை தெளிவாகிறது. சங்க இலக்கியங்களுள் சேரர்கள் சார்பாக நிற்கும் பாட்டுக்களில் காணப்படும் ஊர்களும் அங்கு நிகழும் நிகழ்ச்சிகளும் யவனர்களுடைய குறிப்புக்களும் ஒப்ப நிலவுவதால், அக் குறிப்புக்களை யுரைக்கும் சங்க விலக்கியங்கள் கி. பி. இரண்டாம் நூற்ருண்டுக்குப் பிற்பட்டன வல்ல வென்பது தெளிவாம். கே. ஜி. சேஷையர் முதலியோர், சேர வேந்தர்களைக் கி. பி. மூன்ரும் நூற்ருண்டு முடிய இருந்தவ ரெனக்[1] கருதுவர். அவர்க்குச் சங்க நூல்களே துணையாதலின், சங்க இலக்கியத்தின் பின் னெல்லை மூன்ரும் நூற்ருண் டென்று காணலாம். ஆயினும் அவர் கூறுவன வேறு வகையால் நிறுவப் படாமையின், கி. பி. இரண்டாம் நூற்ருண் டெல்லையோடு நிற்பதே தக்கது.

இறைவனே நல்லருள் நல்கு!

திரு. தி. ச. வாசுதேவன், திருச்சிராப்பள்ளி.

பல்லவி

நல்லருளே வேண்டினேன்—தமிழ்
ஞானத்திலே சிறந்து
மோனத்திலே வளரும் (நல்)

அனுபல்லவி

வல்லமை சான்ற வண்ணமே பூண்டு
மதியாய்த் திகழும் இறைவனே யாண்டும் (நல்)

சரணம்

வாக்கும் செயலும் பொருந்திடச் சேரும்
மாண்பது நேரே மகிழ்வுடன் தாரும்
ஊக்கமும் புலமையும் உருவகச் சீரும்
உடைய சரவணரின் மாணவன் கோரும். (நல்)

இசைத் தமிழ்

கும்பகோணம், சங்கீதம் திரு. ப. சுந்தரேசன்,
இசையாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி: துணர் உ௰சு, மலர் ௰, பக்கம் 326)

இசைகளின் பிறப்பு முறை.

இனி, இளி முதலாக ஏழிசையி னமைப்பையும் அதனதன் அலகுகளையும் முறையே எழுதியறிவாம்.

> முற்றோன்றிய தார நரம்பிற்குக் கிளை உழை யாதலானும் கிளையின் கிளை குர லாதலானும், அஃது கிளையிரு கோடெனப் பெயர் பெற்றது. இங்கு, குரலுக்குக் கிளையாகிய இளி, தார நரம்பிற்குக் கிளையின் கிளையின் கிளை யாயிற்று. அதுபற்றி இளி நரம்புக் கிளை முக்கோடெனப் பெயர் பெற்றது.

(பொதுக் கூட்டு அலகுகள் கணிதமுறை யறிவதற்கே யன்றி வேறல்ல. தனி யலகுகள் மட்டுமே அவ்வகை நிரலுக்குரிய நிலைகளாகும்.)

இசை முக்கோட்டின் வழி				தார நரம்பின் கிளையின் கிளையின் கிளை, இளி.
இளி	பொதுக்கூட்டு அலகுநிலை	ங௰கூ	ச௰ - ச௰க - ச௰உ - ச௰ங	நான்காமலகில்
	தனி யலகுநிலை	0	க - உ - ங - ச	விளரி.
விளரி	பொதுக்கூட்டு	ச௰ங	ச௰ச —	ஐந்தாமலகில்
	தனியலகு	ச	ரு —	தாரம்
தாரம்	பொதுக்கூட்டு	ச௰ச	ச௰ரு - ச௰சா - ச௰எ - ச௰அ	ஒன்பதாமலகில்
	தனியலகு	ரு	சா எ அ கூ	குரல்
குரல்	பொதுக்கூட்டு	ச௰அ	ச௰கூ - ரு௰ - ரு௰க - ரு௰உ	பதின்மூன்றுமலகில்
	தனியலகு	கூ	௰ - ௰க - ௰உ - ௰ங	துத்தம்
துத்தம்	பொதுக்கூட்டு	ரு௰உ	ரு௰ங - ரு௰ச - ரு௰ரு - ரு௰சா	பதினேழாமலகில்
	தனியலகு	௰ங	௰ச - ௰ரு - ௰சா - ௰எ	கைக்கிளை
கைக்கிளை	பொதுக்கூட்டு	ரு௰சா	ரு௰எ —	பதினெட்டாமலகில்
	தனியலகு	௰எ	௰அ —	உழை
உழை	பொதுக்கூட்டு	ரு௰எ	ரு௰அ - ரு௰கூ - சா௰ - சா௰க	இருபத்திரண்டாமலகில்
	தனியலகு	௰அ	௰கூ - உ௰ - உ௰க - உ௰உ	இளி (வலிவுத்தானம்)

முன்னதன் வகையே, கிளை முக்கோட்டின் வழி இளி தாரமாக நிற்க, இளியிற் பிறந்த துத்தம் உழையாக நிற்கின்றது. இதனையு மறிந்த பழந் தமிழர் சேர்ந்த இளியுந் தோன்றும் துத்தம் என்றனர். இளி துத்தம் முதலாக அலகு நிலைகளை முறையே எழுதி யறியவேண்டும். அவ்வாறு எழுதக் கிடைப்பது கிளை முக்கோட்டின் கிளை யானதால், கிளை நாற்கோடெனக் கூறப்படும். அஃதாவது, தார நரம்பின் வழி இந்த துத்தமானது கிளையின் கிளையின். கிளையின், கிளையாகும்.

கிளை நாற்கோட்டின் வழி

துத்தம்	பொதுக்கூட்டு அலகுநிலை	‖	௫௰௨	|	௫௰௩ - ௫௰௪ - ௫௰௫ - ௫௰௬	}	நான்காமலகில்
	தனி யலகுநிலை	‖	0	|	௧ - ௨ - ௩ - ௪	}	கைக்கிளை
கைக்கிளை	பொதுக்கூட்டு	‖	௫௰௬	|	௫௰௭ —	}	ஐந்தாமலகில்
	தனியலகு	‖	௪	|	௫ —	}	உழை
உழை	பொதுக்கூட்டு	‖	௫௰௭	|	௫௰௮ - ௫௰௯ - ௬௰ - ௬௰௧	}	ஒன்பதாமலகில்
	தனியலகு	‖	௫	|	௬ - ௭ - ௮ - ௯	}	இளி
இளி	பொதுக்கூட்டு	‖	௬௰௧	|	௬௰௨ - ௬௰௩ - ௬௰௪ - ௬௰௫	}	பதின்மூன்றாமலகில்
	தனியலகு	‖	௯	|	௰ - ௰௧ - ௰௨ - ௰௩	}	விளரி
விளரி	பொதுக்கூட்டு	‖	௬௰௫	|	௬௰௬ —	}	பதினான்காமலகில்
	தனியலகு	‖	௰௩	|	௰௪ —	}	தாரம்
தாரம்	பொதுக்கூட்டு	‖	௬௰௬	|	௬௰௭ - ௬௰௮ - ௬௰௯ - ௭௰	}	பதினெட்டாமலகில்
	தனியலகு	‖	௰௪	|	௰௫ - ௰௬ - ௰௭ - ௰௮	}	குரல்
குரல்	பொதுக்கூட்டு	‖	௭௰	|	௭௰௧ - ௭௰௨ - ௭௰௩ - ௭௰௪	}	௨௰௨ ல் வலிவுத்
	தனியலகு	‖	௰௮	|	௰௯ - ௨௰ - ௨௰௧ - ௨௰௨	}	துத்தம்

முற்கூறிய வகையினையொத்து கிளைநாற் கோட்டின் வழியாகிய இந்நிரலில் துத்தமானது, தாரமாக நிற்க விளரி உழையாக நின்றது. இதனை யறிந்த பழைமையான மக்கள் துத்தத்துள் தோன்றும் விளரி யென்றனர்.

பின்னரும் விளரி முதலாகவும் எழுதியறிதல் வேண்டும். இஃது கிளையைங்கோடெனக் கூறப்படும்.

கிளையைங் கோட்டின் வழி

விளரி	பொதுக்கூட்டு அலகுமிலை	௬௰௫	௬௰௬ —	முதலலகில்
	தனி யலகுமிலை	0	௧ —	தாரம்
தாரம்	பொதுக்கூட்டு	௬௰௬	௬௰௭ - ௬௰௮ - ௬௰௯ - ௭௰	ஐந்தாமலகில்
	தனியலகு	௧	௨ - ௩ - ௪ - ௫	குரல்
குரல்	பொதுக்கூட்டு	௭௰	௭௰௧ - ௭௰௨ - ௭௰௩ - ௭௰௪	ஒன்பதாமலகில்
	தனியலகு	௫	௬ - ௭ - ௮ - ௯	துத்தம்
துத்தம்	பொதுக்கூட்டு	௭௰௪	௭௰௫ - ௭௰௬ - ௭௰௭ - ௭௰௮	பதின்மூன்றாமலகில்
	தனியலகு	௯	௰ - ௰௧ - ௰௨ - ௰௩	கைக்கிளை
கைக்கிளை	பொதுக்கூட்டு	௭௰௮	௭௰௯ —	பதினான்காமலகில்
	தனியலகு	௰௩	௰௪ —	உழை
உழை	பொதுக்கூட்டு	௭௰௯	௮௰ - ௮௰௧ - ௮௰௨ - ௮௰௩	பதினெட்டாமலகில்
	தனியலகு	௰௪	௰௫ - ௰௬ - ௰௭ - ௰௮	இளி
இளி	பொதுக்கூட்டு	௮௰௩	௮௰௪ - ௮௰௫ - ௮௰௬ - ௮௰௬	௨௰௨ ல் விளரி
	தனியலகு	௰௮	௰௯ - ௨௰ - ௨௰௧ - ௨௰௨	(வலிவுத் தானம்)

இங்கு கிளையைங் கோட்டின்வழி விளரி தாரமாக நிற்க, கைக்கிளை உழையாய் நின்றது. ஆகவே, விளரியுட் கைக்கிளை தோன்றும் பிறப்பு என்று கூறப்பட்டது.

(தொடரும்.)